ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2353/55 - 2023 ඔක්තෝබර් මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.10.12

*2353/55 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 4/81* (XII)

### *1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்*

*23ய என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1980* ஆம் ஆண்டின் *47* ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23ய என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சூழல் அமைச்சர் நசீர் அஹமட் ஆகிய நான், பின்வருவனவற்றை *2023* ஆம் ஆண்டு ஒற்றோபர் *1* ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் இக்கட்டளையால் தடை செய்கின்றேன் -

(அ) நீரை களஞ்சியப்படுத்தும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கென நிறமூட்டப்பட்ட பொலிஎதிலின் டெரெப்தாலேட் (PET) இலிருந்து போத்தல்களை உற்பத்தி செய்தல் ;

(ஆ) போத்தல்களுக்கு சுட்டுத்துண்டு இடப்படுவதற்கென பொலிவினைல் குளோரைட்டின் (PVC) பயன்பாடு ; அத்துடன்

(இ) போத்தல்களுக்கென மேலதிக இலச்சினையாக (சுருங்கு மூடி) பொலித்தீன் அல்லது வேறு ஏதேனும் சிதைவடையாத பொருளைப் பயன்படுத்துதல்.

இக்கட்டளையின் நோக்கத்திற்காக -

“சிதைவடையாத பொருள்” என்பது, நுண்ணங்கிகளின் உதவியுடன் காபன்டைஒக்சைட், மெதேன் அல்லது வேறு ஏதேனும் சாதாரண சேதன மூலக்கூறுகளை உடைக்கக்கூடியதான மரம், கம்பளி, பருத்தி, விலங்குக் கழிவு அல்லது வேறு ஏதேனும் சேதனப் பொருளில் இருந்து ஆக்கப்படாதிருக்கின்றதான ஏதேனும் பொருள் எனப் பொருள்படும்.

“பொலித்தீன்” என்பது, பொலிஎதிலின், பொலிப்புறப்பைலின் பொலிஸ்டிரீன், பொலிவினைல் குளோரைட்டு பொலிஎதைலின் டெரெப்தாலேட் அல்லது அதே போன்ற வேறு ஏதேனும் மூலப்பொருளின் வடிவங்கள் யாவும் எனப் பொருள்படும்.

**நசீர் அஹமட்,**
சூழல் அமைச்சர்.

கொழும்பு,
*2023*, செத்தெம்பர் *14*.

EOG *10-0158*


1A - PG 6530 — 1506 (2023/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*